விலை: 50.00
பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 348 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 16 வெள்ளிக்கிழமை (02.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## அரியாலையில் ரயில்-வான் விபத்து

### சாரதி ஸ்தலத்தில் பலி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை புங்கங்குளம் பகுதியில் புகையிரதத்துடன் மினிவான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் வான் சாரதி சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார்.

அரியாலையை சேர்ந்த தனபாலசிங்கம் சுரேந்தர் (வயது-31) என்பவரே உயிரிழுந்தவராவார்.

➤11

## யாழ். - சென்னை விமான சேவை

### எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் ஆரம்பமாவதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென்னை இடையேயான விமான சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு திறக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமானது

➤11

## கொடிகாமம் பொலிஸ்பிரிவில் குளத்தில் நீராடியவர் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குடமியன் பகுதியில் அமைந்துள்ள குளத்தில் நீராடிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழுந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை

➤11

# யாழ்ப்பாணத்தில் மாசடைந்த காற்று

### தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டு

- **இலங்கையில் காற்று மாசடைந்த மாவட்டங்களில் முதல் மூன்று இடங்களில் யாழ்ப்பாணம் உள்ளடக்கம்.**
- **உடல் நலனில் பாதிப்பு ஏற்படுவதோடு நோய்வாய்ப்பு ஏற்பட சாத்தியமுண்டு என எச்சரிக்கப்பட்டுள்ளது.**

இலங்கையில் காற்றில் தூசியின் அளவு அதிகரித்து. மாசடைந்த மாவட்டங்களில் புத்தளம், யாழ்ப்பாணம் மற்றும் பதுளை ஆகியன முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன.

இலங்கையின் முக்கிய நகர்ப்புறங்களில் சுற்றுப்புற காற்றின் தர நிலை தொடர்பில் தேசிய

➤11

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் தவணை பாடசாலை நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை நிறைவடைந்ததாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்றாம் தவணை பாடசாலை நடவடிக்கைகள் 05 ஆம் திகதி ஆரம்பமாகி

➤11

## மீனவர்களுக்கு மின்சார படகுகள்

(கொழும்பு)

மீனவர்களுக்கு, மின்சாரத்தில் இயங்கக் கூடிய மோட்டார் படகுகளை அடுத்த வருடம் முதல் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் சிறிய அளவில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு பற்றரியில் இயங்கக்கூடிய, மின்சார மோட்டார் படகை அறிமுகப்படுத்த எதிர் பார்த்திருப்பதாக தெரிவித்தார். (ம-7)

## கணவன், மனைவியை கொலை செய்தவருக்கு இரட்டைத்தூக்கு

### வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(வவுனியா)

கணவன், மனைவியை கொலை செய்து நகைகளை கொள்ளையிட்ட குற்றவாளிக்கு இரட்டைத் தூக்குத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

2012ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி வவுனியா பன்றிக்கெய்த குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்த கந்தையா முத்தையா மற்றும் அவரது மனைவி பரமேஸ்வரி இருவரும் கூரிய ஆயு

➤11

## தகுதியற்றவர்களை உடன் நீக்குக

### ஜனாதிபதி ரணில் உத்தரவு



(கொழும்பு)

தகுதியற்றவர்களை உடனடியாக நீக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

வரவு -செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

சமுர்த்தி கொடுப்பனவிற்கு தகுதியுடைய பலருக்கு கொடுப்பனவை வழங்க முடியாத நிலை உள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தகுதியற்ற சிலர் சமுர்த்தி

➤11

## பருத்தித்துறையில் ரிக்ரொக் சாகசம்

### மோட்டார் சைக்கிளுடன் கடலில் விழுந்த இளைஞன்

(கரணவாய்)

பருத்தித்துறை துறைமுகத்தில் மோட்டார் சைக்கிளில் சாகசம் புரிந்து ரிக்ரொக் வீடியோ எடுத்த இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் கடலுக்குள் பாய்ந்து மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

➤11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் மகிழ்

71 வது பிறந்ததின நல்வாழ்த்துக்கள்




எமது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு **தியாகேந்திரன் கிளினிக்** கட்டடத் தொகுதியை நிறுவிய வள்ளலாரும் மற்றும் நோயாளர்களின் தேவை தொடர்பில் நாம் முன்வைக்கும் எந்த கோரிக்கைக்கும் சற்றும் தாமதிக்காது முன்வந்து ஆற்றுகின்ற, பிறக்கின்றபோதே கொடைச் சிறப்போடு தோன்றிய பெருமகனார்

**வா.தியாகேந்திரன்**

**அவர்களுக்கு இன்று 71ஆவது அகவை நாள்.**

இன்றைய பிறந்த நன்னாளில் வள்ளலார் அவர்கள் தீர்க்க ஆயுளோடும் நிறைவான செல்வத்தோடும் களங்கமில்லா நொய்ந்த மனத்தோரை மகிழ் விக்கும் சேவைகள் பல்வாற்ற பல்லாண்டு காலம் நீடு நலத்துடன் வாழ மனம்மிக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம் இப்பிறந்தநாளில்.

Happy Birthday

**வைத்தியசாலைச் சமூகமும்**
**நோயாளர் நலன்புரிச் சங்கமும்**
**ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.**

(13644)


# நாமே இலங்கையின் உண்மையான நண்பன்

## சாணக்கியனுக்கு சீனா பதிலடி

(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நெருக் கடியைச் சமாளிக்க இலங்கைக்கு ஆதரவளிக்க சர்வதேச நிதி அமைப் புகளை தாம் ஊக்குவித்துள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிர தான பங்குதாரர் என்ற வகையில், சர்வ தேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களை உட னடியாக இலங்கைக்கு ஆதரவளிக்கு மாறு சீனா ஊக்குவித்து வருவதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் கடனை மறு சீரமைக்கும் முயற்சியில் இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களின் கூட்டங்களி லும் சீனா தீவிரமாக பங்கேற்றதாகவும் தூதரகம் கூறியுள்ளது.

சீனாவின் நிதி நிறுவனங்கள் கடந்த ஏப்ரல் மாதம் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியை தாமத மின்றி தொடர்பு கொண்டதாகவும் தூத ரகம் குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு வங்கிகளின் பணிக்குழுக் கள் நாட்டிற்கு பயணம் செய்து வருவ தாகவும், இருதரப்பு பேச்சுவார்த்தை கள் தொடர்வதாகவும் அது கூறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் விடுத்த கோரிக் கைக்கு பதிலளிக்கும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.(ம-7)


**பணிப்பெண் தேவை (உதவியாளர்)**

வீட்டு வேலைக்கு உதவியாளர் தேவை
உணவு தங்குமிட வசதிகளுடன்
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்
தரகர்கள், நிறுவனங்களுக்கூடாக
தொடர்பு கொள்ள வேண்டாம்
(C-5390)

தொடர்பு : 075 484 71 71
இடம் வடமராட்சி



**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட் யாழ்ப்பாணம் | K.K.S றோட் சுன்னாகம்

**BARATHY**
சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும்

**A/L 2024**

**கலை, வர்த்தகப் பிரிவு**
புதிய வகுப்புகள் ஆரம்ப அலகிலிருந்து

**ஆரம்பம் - 3.12.2022 சனி**

எமது வழமையான நீங்கள்
நன்கறிந்த வடபுலத்தின் பிரபலம்
பெற்ற ஆசான்களினால்

Note: உங்கள் அனுமதிகளை நீங்கள் விரும்புகின்ற மூன்று நிறுவன அலுவல கங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(C-5385)

**T.P : 077 376 3511**



# மரண அறிவித்தல்

திருமதி **தளையரத்தினம் ஆனந்தநாயகி**



மயிலணியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தளையரத் தினம் ஆனந்தநாயகி அவர்கள் நேற்று (01.12.2022) இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி - சிவயோகம் தம் பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தளையரத்தினத் தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிறிஸ் கந்தராஜா, பாலகுமார் ஆகி யோரின் அன்புச் சகோதரியும் குமாரசாமி புலவரின் பேர்த்தியும் பாலசுரேஷின் பாசமிகு தாயாரும் நிரூஜாவின் பாசமிகு மாமியும் கிருத்திகனின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02.12.2022) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியள வில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தி யாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பாலசுரேஷ் (சுரேஷ்)
077 634 5591

(C-5392)


# கடற்றொழில் திட்டங்களால் அந்தந்த பிரதேச மக்கள் நன்மையடைய வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(கொழும்பு)

கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள் ளப்படும் திட்டங்கள், அந்தந்தப் பிரதேசங் களை சேர்ந்த மக்கள் நன்மையடையும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதிகாரி களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன், வட்டவான் பிரதேசத்தில் அமைந்துள்ள இறால் பண்ணையின் செயற்பாடுகளும் அந்தப் பிரதேசத் தைச் சேர்ந்த மக்களுக்கு நன்மை களை வழங்கும் வகையில் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் எனவும் வலி யுறுத்தினார்.

கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச் சில் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந் தன், கிழக்கு மாகாணத்தில், கடற் றொழில் மற்றும் நீர் வேளாண்மை செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பது தொடர்பாக கலந்து ரையாடினார்.

இதன்போது, வட்டவான் பகுதியில், பிரதேச மக்களுக்கான வாழ்வாதா ரத்தை வலுப்படுத்தும் நோக்கில், [illegible] உதவியுடன் அமைக் [illegible] இறால் பண்ணை முகா மைத் துவம் மற்றும் செயற்பாடுகள், வினைத் திறன் இன்றி இருப்பதாகவும், குறித்த பண்ணை அமைக்கப்பட்ட நோக்கத் திற்கு மாறாக செயற்பட்டு வருவ தாகவும், இராஜாங்க அமைச்சர் சிவ னேசத்துரை சந்திரகாந்தன், தன்னு டைய ஆதங்கத்தை வெளிப்படுத்தி னார்.

குறித்த விடயம் தொடர்பாக அவ தானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட்டவான் இறால் பண்ணையின் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கான குழு ஒன்றை அமைத்துள்ளதுடன், குறித்த குழுவி னால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை யின் அடிப்படையில், எதிர்வரும் தை மாதத்தில் இருந்து, பண்ணையின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுக்க வேண்டும் என வலி யுறுத்தினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரிப்பு-சுகாதாரப் பிரிவு

(கொழும்பு)

**விவசாயப் பகுதிகளை அண்மித்த பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது.**




மழை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக நெற் செய்கையில் ஈடுபடும் போது சிறுநீரக நோயாளர்கள் மற்றும் கல்லீரலுடன் தொடர்புடைய நோய் தொற்றுக்குள்ளானவர்கள் இந்த விடயம் தொடர்பாக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

வயல்களை அண்மித்த பகுதிகளில் துப்புரவு பணிகளில் ஈடுபடும்போது அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஞி)

# சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியை மீள ஆரம்பிக்க இணக்கம்

(கொழும்பு)

தனியார் மருத்துவ பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பது தொடர்பில் நேற்று பாராளுமன்றில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் இணக்கம் எட்டப்பட்டது.

இதன்படி சைட்டம் என்ற தனியார் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க இரண்டு தரப்பினரும் உடன்பட்டனர்.

கல்வி என்பது அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பித்து, அங்கு பயிலும் வறுமையான மாணவர்களுக்கு அரசாங்கம் நிதியுதவிகளை மேற்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த கல்லூரியை மீள ஆரம்பிப்பதில் எந்த சிக்கலும் இல்லையென உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

எனவே அனைத்து தரப்பினரும் இணைந்து இது தொடர்பில் கலந்துரையாட முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கல்லூரி அனுமதி பரீட்சையை தாய்மொழியில் எழுத வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில், கருத்துரைத்த அவர், அனுமதிப் பரீட்சையை ஆங்கில மொழியில் எழுத வேண்டும் என்பதை, பிரதம நீதியரசரும் சட்டத்தரணிகள் சங்கமும் தீர்மானித்துள்ளன. இதனை அரசாங்கத்தால் மாற்ற முடியாது.

எனினும் சட்டக்கல்லூரியில் ஆங்கில பாடத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று தாம் பரிந்துரைப்பதாக குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, இதற்காக அரசாங்கமும், நிதி வழங்கலை செய்ய முடியும் என்று தெரிவித்தார். (ஞி)

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியீடு

(கொழும்பு)

க.பொ.த உயர்தரம் 2021 (2022) பரீட்சை பெறு பேறுகளின்படி பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளி, இன்று வெளியிடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக வரலாற்றிலேயே முதற்தடவையாக விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டு மிகவும் குறுகிய காலத்துக்குள் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இதன்படி பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு மாதம் ஒரு வாரத்துக்குள் வெட்டுப்புள்ளிகளை வெளியிட பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஞி)

# உயர்தரப் பரீட்சை முடியும் வரை மின்வெட்டை நிறுத்துவது தொடர்பில் ஆராய்வு

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை முடியும் வரை உத்தேச மின்சாரக் கட்டண உயர்வை நிறுத்துவது மற்றும் மின்வெட்டை நிறுத்துவது குறித்து ஆராயவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி நடுப்பகுதி வரை நடத்தப்படவுள்ளதாக அவர் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

மீண்டும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சைக்கு முகம் கொடுக்கும் மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அமைச்சரவையில் இந்த விடயத்தை முன் வைத்து மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஞி)

# மக்களின் கருத்துகள் புறக்கணிக்கப்பட்டமைக்கு வரவு-செலவுத்திட்டம் சிறந்த உதாரணம்

## உலக வங்கியின் முன்னாள் தலைமை பொருளாதார நிபுணர்

(கொழும்பு)

தொழில்நுட்ப வல்லுநர்களை செவிமடுப்பதற்கு பதிலாக மக்கள் என்ன சொல்கின்றார் கள் என்பதை இலங்கை அரசு செவிமடுக்க வேண்டும் என உலக வங்கியின் முன்னாள் தலைமை பொருளாதார நிபுணர் பேராசிரியர் சாந்த தேவராஜன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் கருத்துக்களிற்கு செவிமடுக்காத பட்சத்தில் தேசிய பொருளாதாரத்தின் உண்மையான பிரச்சினைகளிற்கு தீர்வை காணமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்காக தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் ஆலோசனை குழுக்களை அமைப்பதிலும் செயலணிகளை அமைப்பதிலும் கவனம் செலுத்தினார்கள். ஆனால் இந்த நடவடிக்கைகள் மக்கள் எதிர்கொண்டுள்ள உண்மையான பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்கு உதவவில்லை. சவால்களிற்கு தீர்வை காண்பதற்கு உதவவில்லை என தெரிவித்துள்ள அவர் மக்களின் குரல்கள் புறக்கணிக்கப்பட்டமையே இதற்கு காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக பொருளாதார பிரச்சினை இலங்கையில் தொழில்நுட்ப பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது.


திறமைசாலிகளை தெரிவு செய்து அவர்களை ஒரு அறையில் இருக்க வைத்தால் அவர்கள் மிகச் சிறந்த பொருளாதார கொள்கைகளை வகுப்பார்கள் என்ற சிந்தனை காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ள சாந்ததேவ ராஜன் இதுவே பிரச்சினை எனவும் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப வல்லுநர்களின் கொள்கை தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முயல்வதன் காரணமாக யதார்த்தத்தையும் பொதுமக்களின் உண்மையான பிரச்சினைகளையும் தொடர்புபடுத்த முடியாத புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றுடன் கலந்தாலோசனைகளை மேற்கொள்வது அவசியம். அதே வேளை பொதுமக்களை கலந்தாலோசிப்பதும் அவசியம் ஆனால் அவ்வாறான நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடப் போவதில்லை.

2023 வரவு-செலவுதிட்டம் மக்களின் கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டமைக்கான சிறந்த உதாரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஞி)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் அமெ.தூதுவருடன் பேச்சு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் தூதுவர் ஜூலி சுங்கை சந்தித்து உரையாடினர்.

சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகிய நால்வரே அமெரிக்கத் தூதுவரோடு பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது என்று இதில் கலந்துகொண்ட கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்தனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். (ஞி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்- 2022

# 4 ஆவது போட்டியில் AB அணி வெற்றி



மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 3 ஆவது தடவையாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ண துடுப்பாட்ட தொடரின் 4 ஆவது போட்டி கடந்த 23 ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற போது AB அணி TYMHA அணியை 82 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிமுன் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற AB அணி துடுப்பாட்டத்தை மேற்கொண்டது.

AB அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களை பெற்றது. யது-27, ஞானா-21, உத்தமன்-33, ஆதி-47, சஜிபராஜ்-13 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் TYMHA அணி சார்பாக சரோன்-01, கிஸ்நோ-02, அஜன்தன்-02, மயூரன்-01 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய TYMHA அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

யதுர்ஸன்-25, கோபிநாத்-16, மகிதரன்-15 ஓட்டங்களை பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் AB அணி சார்பாக சஜி-02, பிருந்தா-02, டிலு-01, ஞான-01, கஜி-01 விக்கெட்டினை கைப்பற்றியுள்ளனர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு AB அணி 5.70 புள்ளிகளையும் TYMHA அணி 1.76 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

உலகக்கிண்ண கால்பந்தாட்டம்

# அவுஸ்திரேலியா, ஆர்ஜென்டினா ரவுண்ட் 16இற்கு முன்னேற்றம்

கட்டார் பிபா கால்பந்து உலகக்கிண்ணத் தொடரின், குழுநிலைப் போட்டிகளில் அவுஸ்திரேலியா மற்றும் ஆர்ஜென்டினா அணிகள் வெற்றி பெற்று ரவுண்ட்-16 சுற்றுக்கு முன்னேறியுள்ளன.




குழு டி பிரிவில் நடைபெற்ற போட்டியில், அவுஸ்திரேலியா அணியும் டென்மார்க் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

அல் ஜனோப் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், அவுஸ்திரேலியா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் அவுஸ்திரேலியா அணி சார்பில், போட்டியின் 60 ஆவது நிமிடத்தில் மெத்தியு லொக்கி அணிக்காக வெற்றி கோலை அடித்தார்.

குழு சி பிரிவில் நடைபெற்ற போட்டியில், ஆர்ஜென்டினா அணி மற்றும் போலந்து அணிகள் மோதின.

ராஸ் அபு அபவுத் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், ஆர்ஜென்டினா அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

ஆர்ஜென்டினா அணி சார்பில், போட்டியின் 46 ஆவது நிமிடத்தில் அலெக்சிஸ் மேக் அலிஸ்டர் 46 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், ஜூலியன் அல்வாரெஸ் 67 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

குழு டி பிரிவில் நடைபெற்ற போட்டியில், துனிசியா அணியும் பிரான்ஸ் அணியும் மோதின.

எடிவுகேஷன் சிட்டி விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், துனிசியா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

துனிசியா அணி சார்பில், வாபி காஸ்ரீ போட்டியின் 58 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

குழு சி பிரிவில் நடைபெற்ற போட்டியில், மெக்ஸிக்கோ அணியும் சவுதி அரேபியா அணியும் மோதின.

லுசைல் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், மெக்ஸிக்கோ அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில், மெக்ஸிக்கோ அணி சார்பில், ஹென்றி மார்டின் 47 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், லுயிஸ் சாவெஸ் 52 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

சவுதி அரேபியா அணி சார்பில், சேலம் அல் தவ்சாரி போட்டியின் 95 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2738

Search for people, places and things

### யஷ்வந்




### சகிதன்




### தினுஷா





### ருத்ரா




### றெகானா




### கதீஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசா கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

இரட்டை குடியுரிமைக்கான விண்ணப்பம் உள்ளிட்ட பல பிரிவுகளுக்கான விசா கட்டணம் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இரட்டை குடியுரிமையை வழங்குவதற்கான கட்டணம் மூன்று இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவில் இருந்து இரண்டாயிரம் அமெரிக்க டொலர்களாக திருத்தப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், குடியுரிமை சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தாட்சி பத்திரங்களின் பிரதிகளுக்கான கட்டணம் 1,150 ரூபாவில் இருந்து 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வதிவிட வருகை விசா வேலைத்திட்டத்தின் கீழ் விசா வழங்கல் 200 அமெரிக்க டொலரால் அதிகரித்துள்ளது.

இதுதவிர, மேலும் சில பிரிவுகளுக்கான விசா கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# மின்கட்டண அதிகரிப்பை ரத்து செய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளமை குறித்து சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது எந்த வகையில் நியாயமானது என்று அவர் கேள்வி எழுப்பினார்.

நாட்டில், பொருளாதாரப் பிரச்சினை இருப்பது அனைவருக்கும் தெரியும். அதில் இருந்து மீளும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

எனினும் அதற்காக மின்




சாரக்கட்டணத்தை அதிகரிப்பது என்பது மனிதத் தன்மையற்ற செயல். ஏற்கனவே பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாமல், மாணவர்கள் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் மின்சாரக்கட்டணங்கள் அதிகரிக்கப்படுவது ஏற்புடையதல்ல என்றும் எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டார்

எனவே பாராளுமன்றத்தில் யோசனை ஒன்றை முன்வைத்து, மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (நி)

# தொடரூந்துடன் முச்சக்கரவண்டி மோதி விபத்து ரஷ்ய பெண் உட்பட இருவர் பலி



(காலி)

காலி, ஹபராதுவ பிரதேசத்தில் நேற்று முச்சக்கர வண்டியொன்று தொடரூந்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ரஷ்ய பிரஜை உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹபராதுவ, தலவெல்ல - மஹரம்ப தொடரூந்து கடவைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் 62 வயதான முச்சக்கரவண்டியின் சாரதியும் ரஷ்ய பிரஜையான பெண்ணொருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

குறித்த பெண் தனது பிள்ளையை முன்பள்ளிக்கு அனுப்பிவிட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தொடரூந்து கடவையில் உள்ள கடவை தடுப்பு இயங்கவில்லை என்றும், அது தொடர்பில் வாகன சாரதிகளுக்கான எச்சரிக்கை காட்சிப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# 6000க்கும் மேற்பட்ட மாணவர்கள் எந்த பாடத்திலும் சித்தியடையவில்லை

## சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள சாதாரண தரப் பரீட்சையை எழுதிய மாணவர்களில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எந்த பாடத்திலும் சித்தி பெற வில்லை என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதிபர்களின் சம்பள முரண்பாடுகள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள், கொடுப்பனவுகள் பற்றி பேசுகின்றனர்.

ஆனால், மாணவர்களுக்கு வகுப்புக்களில் சரியான முறையில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றனவா என்பது பற்றி இங்கு எவரும் பேசவில்லை.

6 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சாதாரண தரத்தில் சித்தியடையவில்லை.

11 ஆண்டுகள் கல்வி கற்ற பின்னர் அனைத்து பாடங்களிலும் தோல்வி. இது பற்றி எவரும் பேசுவதில்லை என அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

02.12.2022
கார்த்திகை 16, வெள்ளிக்கிழமை
நவமி முற்பகல் 10.25 மணிவரை

பூரட்டாதி முற்பகல் 10.03 மணிவரை
சுபநேரம் -6.15-7.45 மணிவரை
இராகுகாலம் - 10.45-12.15 மணிவரை

சந்திராஷ்டமம்
மகம்

வளவன்




தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்,காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.




சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்,உடல் நலன் சீராகும்,எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு.




பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நட்பொன்று பகையாகலாம்.




பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், காரிய அனுகூலமுண்டு.




குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்,சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.




நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம்,மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வது நல்லது, போசன சுகமுண்டு.

துன்பம் ஒருவனை செல்வனாக்காவிடினும் அறிவாளியாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களே போதைக்கு அடிமையாகின்றனர்

## சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களே அதிகமாக போதைக்கு அடிமையாகி வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் சபையில் கருத்துத் தெரிவிக்கையில்,

சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு. இன்று சமூகத்தில் பாரிய பிரச்சினை போதைவஸ்துப் பாவனை. குறிப்பாக பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் போதைக்கு விரைவில் அடிமையாகின்றனர்.

பாடசாலையை விட்டு இடைவிலகுகின்ற மாணவர்கள் தொடர்பில் கண்காணித்து கிராம உத்தியோகத்தருக்கோ அல்லது உரிய தரப்பினருக்கோ தெரியப்படுத்த வேண்டியது அவசியம்.

அவ்வாறு இடைவிலகிய மாணவர்கள் வறுமை காரணமாக பாடசாலையை விட்டு இடைவிலகி இருந்தால் அவர்களுடைய கற்றலுக்கு உதவ பலர் தயாராக இருக்கின்றனர்.

எனவே இவ்வாறான மாணவர்கள் தொடர்பில் உடன் தகவல் வழங்கி அவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள் என தெரிவித்தார். (4-6-30)

# வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கை நெறி

## யாழ்.பல்கலையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் முதல் முறையாக வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வங்கி மற்றும் நிதித் துறைகளில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கும் இத்துறைகளில் இணைய விரும்புவோருக்கும் அடிப்படை அறிவினையும் அங்கீகரிக்கப்பட்ட தராதரத்தையும் வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்படுகின்ற இந்த டிப்ளோமா கற்கை நெறியின் உத்தியோக பூர்வ அறிமுக நிகழ்வு நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (4-6-104)

# மாற்றுத்திறனாளிகள் தின விழா-2022

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினவிழா நாளை சனிக்கிழமை பலாலி வீதி ஊரெழுவில் அமைந்துள்ள N.K மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் S.Y சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. வடமாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் நளாயினி இன்பராஜ் முதன்மை விருந்தினராகவும் கைதடி சித்த மருத்துவ அதிகாரி ஐ.ஜெபநாமகணேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

# கடலட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அனலைதீவு - பருத்தித்தீவு பகுதியில் கடற்றொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளை உடன் அகற்றுமாறு கோரி அப்பகுதி கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் திடீரென தொழில் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை கடலட்டை பண்ணைகளை அகற்றும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் அனலைதீவு 3 ஆம் வட்டார கடற்றொழிலாளர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். (4-6-33)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியின் தேவை கருதி கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள குட்டிச்சுட்டி முன்பள்ளியில் இடம்பெறும். (4-6-33-104)

## பிள்ளையார் கதை விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு, கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் பிள்ளையார் கதை உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி அபிஷேகம், மூலமூர்த்தி பூசை என்பன நடைபெற்று பிள்ளையார் கதை படிப்பு நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு விசேட அபிஷேகம், மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி உலா நிகழ்வு நடைபெற்று பெருங்கதை படிப்பு பூர்த்தியாகும் என ஆலய பிரதமகுரு அறியத் தருகின்றார். (4)

## சடலங்களை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

அடையாளம் காணப்படாத நிலையில் விடுதி இல.34 இல் இறந்த பெயர், வயது, இடம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்றும் தெல்லிப்பழை பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட பெண்ணின் சடலம் (திருமதி ர.கிருசாந்தன்) உம் யாழ்.போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. இச் சடலங்கள் இதுவரையிலும் யாராலும் உரிமை கோரப்படவில்லை.

எனவே குறித்த சடலங்களை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சியமுனாநந்தா கேட்டுக் கொண்டுள்ளார். (4)

## மாநகர சபைக்கு எதிராக இரண்டாவது நாளாகவும் கல்லுண்டாயில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாயில் யாழ்.மாநகர சபையினர் குப்பை கொட்டுவதற்கு எதிராக வலி.தென்மேற்கு பிரதேச சபையினரால் கல்லுண்டாய் வைரவர் ஆலயத்திற்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்று வருகிறது.

யாழ்.மாநகர சபையினர் வழமையாக குப்பை கொட்டும் கல்லுண்டாய் பகுதிக்கு குப்பை கொட்டுவதற்காக வந்தவேளை, குப்பைகளை ஏற்றிவந்த எட்டு வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டதுடன் ஏனைய வாகனங்கள் திரும்பிச் சென்றுள்ளன. (4)



பருத்தித்துறை தும்பளை, நெல்லண்டைப் பகுதியில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு புதிதாக வீடு நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் இடம் பெற்றது. (படம்:- மகாலிங்கம்)

## கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் நினைவு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 58 ஆவது நினைவுதின நிகழ்வு எதிர்வரும் திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை உபதலைவர் க.மகாதேவன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (4)



Solidarity Center நிறுவனத்தின் அனுசரணையில் பால் மற்றும் பால்நிலை வன்முறைகளற்ற ஆரோக்கியமான வேலைச்சூழல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக [illegible] போர் கூடத்தில் நடைபெற்றது. (படம்:- [illegible]ந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48,500 ஆண்டுகளுக்கு பின் புத்துயிர் பெற்ற கொடிய வைரஸ்

## ஆய்வாளர்கள் எச்சரிக்கை



(மொஸ்கோ)

ரஷ்யாவில் இதுவரை உறைந்த ஏரியின் அடியில் புதைந்திருந்த 48,500 ஆண்டுகள் பழமையான ஜாம்பி வைரஸை பிரான்ஸ் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நிலையில், 'ஜாம்பி வைரஸ்' மூலம் மேலும் ஒரு தொற்றுநோய் குறித்த அச்சத்தை ஆய்வாளர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

'பழங்கால அறியப்படாத வைரஸின் புத்துயிரால் தாவரங்கள், விலங்குகள் அல்லது மனித நோய்களின் விடயத்தில் நிலைமை மிகவும் பேரழிவு தரும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புவி வெப்பமடைதல், பருவநிலை மாற்றம் காரணமாக பல ஆயிரம் ஆண்டுகளாக நிரந்தரமாக உறைந்திருந்த இந்த ஏரி உருகியுள்ள நிலையில், இதில் புதிய வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

பருவநிலை மாற்றத்தால் பனிக் கட்டிகள் வேகமாக உருகும் நிலையில் திடீரென வைரஸ் தொற்று பரவினால், ஆபத்து அதிகம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# ஆப்கானில் குண்டுவெடிப்பு 18 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் சமங்கன் மாகாணத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 27 பேர் காயமடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலை மாணவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (நி)

## மாநகர சபை, யாழ்ப்பாணம்

### நல்லூர் உற்சவகால தற்காலிக கடைகளுக்கான பிணைப்பண வைப்பு மீளளிப்பு (2018, 2019)

யாழ்.மாநகர சபையில் 2018,2019 ஆம் ஆண்டுகளின் நல்லூர் உற்சவகால தற்காலிக கடை கேள்வி கோரலுக்கான வைப்புப் பணமானது இதுவரை காலமும் உரியவர்களால் மீளப்பெறப்படாமல் வைப்பில் காணப்படுகின்றது. இதனை உரிய ஆதாரங்களை சமர்ப்பித்து 2022.12.23 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். 2022.12.23 ஆம் திகதிக்கு முன்னர் மீளப்பெறப்படாத வைப்புக்கள் யாவும் மாநகரசபையின் வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன். இது தொடர்பான மேலதிக தகவல்களை யாழ்.மாநகர சபையின் முன்னரங்கு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முதல்வர்
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-5384)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
"கல்வி மனித உரிமை. அதில் ஆண் பெண் பேதம் ஆகாது. சகலருக்கும் கல்வி சமத்துவமாய் வழங்குவோம்."
(C-5323)
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

பல ஆயிரம் கடந்த பதிவுகள்
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
அதிகரித்துவரும் நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-
சேவைக்கட்டணம் 500 /-
தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா:7 ½ சூரி 12 செவ் 2 இல்
உயரம்:172 cm
தகைமை/தொழில்:BSc ஆசிரியர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி அரசதொழில்
தொ.இ: B/13170

பிறப்பு:1999 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா:சூரி 8 செவ் 11 இல்
தகைமை/தொழில்:A/L புகைப்படக்கலைஞன்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/13173

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா:சூரி 6 செவ் 12 இல்
தகைமை/தொழில்: A/L (அவுஸ்திரேலியா)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13175

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா:64 ¼சூரி 7 செவ் 8 இல்
தகைமை/தொழில்:பட்டதாரி உதவி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியர் விரும்பத்தக்கது
தொ.இ: B/13177

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா:57 சூரி 7 செவ் 8 இல்
உயரம்:5'
தகைமை/தொழில்:பொறியியலாளர்
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ:G/11319

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:அத்தம் 4
கி.பா:சூரி 1 செவ் 2 இல்
உயரம்:5' 11"
தகைமை/தொழில்:A/L வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:சொந்தத் தொழில்
தொ.இ:G/11320

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை 3
கி.பா:சூரி 8 செவ் 10 இல்
உயரம்:5' 4"
தகைமை/தொழில்:GAQ 3 ஆம் வருடம்
எதிர்பார்ப்பு:வெளிநாடு அல்லது அரச தொழில்
தொ.இ: G/11324

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா:33 சூரி 11 செவ் 12 இல்
உயரம்:5' 2"
தகைமை/தொழில்: BSc (பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/11333

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 42





அவளுடைய ஆசைக் கரங்கள் பத்து, இருபது, நூறு என்று வுளர்ந்தன. அவ்வளவு கரங்களையும் ஆவலுடன் நீட்டிக் கொண்டு சமுத்திரராஜனை அணுகினாள்.

இவ்விதம் ஆசைக் கணவனை அடைவதற்குச் சென்ற மணப் பெண்ணுக்குச் சோழ நாட்டுச் செவிலித் தாய்மார் செய்த அலங்காரங்கள் தான் என்ன? அடடா! எத்தனை அழகிய பச்சைப் புடைவைகளை உடுத்தினார்கள்? எப்படியெல்லாம் வண்ண மலர்களைச் சூட்டினார்கள்? எவ்விதமெல்லாம் பரிமள சுகந்தங்களைத் தூவினார்கள்? ஆஹா! இரு கரையிலும் வளர்ந்திருந்த புன்னை மரங்களும் கடம்பமரங்களும் ரத்தினப் பூக்களையும் வாரிச் சொரிந்த அருமையை எவ்விதம் வர்ணிப்பது? தேவர்கள் பொழியும் பூமாரியும் இதற்கு இணையாகுமா?

பொன்னி நதியே! உன்னைப் பார்த்துக் களிப்படையாத கன்னிப் பெண் யார்தான் இருக்க முடியும்! உன் மணக்கோல ஆடை அலங்காரங்களைக் கண்டு உள்ளம் பொங்காத மங்கை யார் இருக்க முடியும்?

கல்யாணப் பெண்ணைச் சுற்றி ஊரிலுள்ள கன்னிப் பெண்கள் எல்லோரும் சூழ்ந்து கொள்வது போல் உன்னை நாடிப் பெண்கள் வந்து கூடுவதும் இயற்கையே அல்லவா!

பொன்னி தன் மணாளனைத் தழுவிக் கொள்ள ஆசையுடன் நீட்டும் பொற்கரங்களில் ஒன்றுக்குத் தான் அரிசிலாறு என்று பெயர்! காவேரிக்குத் தென் புறத்தில் மிக நெருக்கத்தில் அரிசிலாறு என்னும் அழகிய நதி அமைந்திருக்கிறது. அப்படி ஒரு நதி இருப்பது சற்றுத் தூரத்தில் இருந்து வருகிறவர்களுக்குச் சொல்லித் தான் தெரிய வேண்டும்.

இருபுறமும் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் இனிய பசுமரங்கள் அப்படி அந்நதியை மறைத்து விடுகின்றன.

பிறந்தது முதலாவது அந்தப்புரத்தை விட்டு வெளியேறி அறியாத அரசகுலக் கன்னியென்றே அரிசிலாற்றைச் சொல்லலாம். அந்தக் கன்னி நதியின் அழகுக்கு இந்த உலகில் உவமையே கிடையாது.

நல்லது; அந்தப்புரம் என்னும் எண்ணத்தை மறந்துவிட்டு வாசகர்கள் நம்முடன் அரிசிலாற்றை நெருங்கி வருவார்களாக. சோலையாக நெருங்கி வளர்ந்திருந்த மரங்களுக்கிடையே புகுந்து வருவார்களாக! அடா இது என்ன அருமையான காட்சி? அழகுக்கு அழகு செய்வது போலும் அமுதத்துக்கு இனிப்பு ஊட்டுவது போலும் அல்லவா இருக்கிறது?

சித்திர விசித்திரமாகச் செய்த அன்ன வடிவமான வண்ணப் படகில் வீற்றிருக்கும் இந்த வனிதாமணிகள் யார்? அவர்களில் நடு நாயகமாக, நட்சத்திரங்களுக்கிடையில் பூரண சந்திரனைப் போல் ஏழு உலகங்களையும் ஆளப் பிறந்த ராணியைப் போல், காந்தியுடன் விளங்கும் இந்த நாரீமணி யார்? அவளுக்கு அருகில் கையில் வீணையுடன் வீற்றிருக்கும் சாந்தசுந்தரி யார்?

இனிய குரல்களில் இசை பாடி நதி வெள்ளத்துடன் கீத வெள்ளமும் கலந்து பெருகச் செய்து கொண்டு வரும் இந்தக் கந்தர்வப் பெண்கள் யார்? அவர்களில் ஒருத்தி மீனலோசனி; இன்னொருத்தி நீலலோசனி; ஒருத்தி தாமரை முகத்தாள்; இன்னொருத்தி கமல இதழ் நயனத்தாள்; ஆஹா வீணையை மீட்டுகிறாளே, அவளுடைய காந்தளை ஒத்த விரல்கள் வீணைத் தந்திகளில் அங்குமிங்கும் சஞ்சரிக்கும் அழகைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்.

அவர்கள் இசைக்கும் கீதத்தின் இனிமையைத்தான் என்ன என்று சொல்லுவது? அதைக் கேட்பதற்காக நதியின் வெள்ளம் கூட அல்லவா தன் ஓசையை நிறுத்தியிருக்கிறது? நதிக்கரை மரங்களில் வாழும் கிளிகளும் குயில்களும் கூட வாய்திறவா மோனத்தில் ஆழ்ந்திருக்கின்றனவே! மனிதர்களாய்ப் பிறந்தவர்கள், கேட்கும் செவி படைத்த பாக்கியசாலிகள். அந்த அமுத கானத்தை கேட்டுப் பரவசம் அடைவதில் வியப்பு என்ன? படகில் வரும் அப் பெண்கள் என்ன பாடுகிறார்கள் கேட்கலாம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## நானே மணமகன்!

கொடியூர் என்ற கிராமத்தில் கோதண்டம் என்ற பணக்காரன் இருந்தான். அவனுக்கு மூன்று மகன்கள். கோதண்டமும் அவன் முதல் இரு மகன்களும் சற்றும் ஈவிரக்க மற்றவர்கள். தாம் உயர் அந்தஸ்தில் இருப்பவர்கள் என்று எண்ணி வேலைக்காரர்களிடம் தயை தாட்சண்யம் காட்டவே மாட்டார்கள்.

ஆனால் கோதண்டத்தின் கடைசி மகனான கண்ணன் எல்லோரிடமும் நன்கு பழகினான். வேலைக்காரர்களை மதித்து வந்தான்.

அவன் தன் தந்தையிடமும் சகோதரர்களிடமும் தன் வயலில் வேலை செய்யும் ஆட்களுக்காகப் பரிந்து பேசி வந்தான். வேலைக்காரர்களும் மனிதர்களே எனக் கருதி மனிதாபிமானத்துடன் அவர்களை நடத்த வேண்டும் என்று கூறி வந்தான்.

அவர்களோ “இதெல்லாம் வெறும் பேச்சு, நடைமுறைக்கு உதவாது. வேலைகாரர்களுக்கு அதிக இடம் கொடுத்தால் அவர்கள் நம் தலைமீது ஏறி உட்கார்ந்து விடுவார்கள். அப்புறம் நம் கதி அதோகதி தான்” என்று கூறினர்.

கோதண்டத்திடம் பல வருடங்களாக வேலை செய்து வந்தவன் பெருமாள். அவனுடைய தூரத்து உறவினன் ஒருவன் புலியூரில் இருந்தான். அவன் தன் ஒரு ஏக்கர் நிலத்தை முன்பு பெருமாள் தன் உயிரைக் காப்பாற்றியதை நினைவில் வைத்துக் கொண்டு அவன் பெயருக்கு எழுதி வைத்து விட்டு இறந்து போனான்.

எனவே பெருமாள் தன் எஜமானன் கோதண்டத்திடம் போய் “ஐயா புலியூரில் எனக்கு ஒரு ஏக்கர் நிலம் கிடைத்துள்ளது. எனவே நான் உங்கள் வேலையை விட்டுப்போக எனக்கு அனுமதி கொடுங்கள்” என்று வேண்டினான்.

அது கேட்டு கோதண்டம் எரிந்து விழுந்து “இங்கு வேலையை விட்டுப் போவதானால் இரண்டு மாதங்களுக்கு முன்பே தெரிவிக்க வேண்டும் என்பது நிபந்தனை. அதனால் இன்றிலிருந்து இரண்டு மாதம் கழித்து நீ போகலாம்” என்ற சற்றும் இரக்கமில்லாமல் கூறினான். வேறு வழியின்றி பெருமாள் இரண்டு மாதம் வேலை செய்து விட்டு புலியூருக்குச் சென்றான்.

பெருமாள் தன் மனைவியுடனும் மகளுடனும் புலியூரில் புதுக் குடித்தனம் வைத்து விட்டு தனக்குக் கிடைத்த நிலத்தில் விவசாயம் செய்ய ஏற்பாடுகளைச் செய்யலானான்.

அவனுக்கு முன்பின் தனியாக விவசாயம் செய்து பழக்கம் கிடையாது. கணக்குப் போட்டுப் பார்த்ததில் விவசாயம் ஆரம்பிக்க அவனுக்கு ஒரு பெருந்தொகை தேவைப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இரவு குடிப்பதும் சரி, ஓராண்டு சிந்திப்பதும் சரி.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யுத்த காலம் போல வடக்கில் பலியெடுக்கும் புகையிரதம்

புகையிரதக் கடவைகளில் ஏற்பட்ட விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிடப்படுமாயின், மிகச் சொற்ப காலத்தில் வடபகுதியிலேயே அதிகமானோர் உயிரிழந்த தகவலை அறிய முடியும்.

எனினும் இதுபற்றி யாருமே கருசனை கொள்வதாகத் தெரியவில்லை.

புகையிரதம் மோதி ஒருவர் பலி, இருவர் பலி என்ற செய்தியோடு அந்தச் சம்பவம் மறந்துவிடப்படும்.

இதற்கப்பால், விபத்து நடந்த இடத்தில் சிதறிப்போன மனித உடலங்களைக் கொத்தித் தின்னுகின்ற காகங்கள். அதே எண்ணிக்கையில் கையடக்கத் தொலைபேசிகள் மூலம் புகைப்படம் எடுப்போர். கடமையின் நிமிர்த்தம் நாடா பிடித்து அளக்கின்ற பொலிஸார் அதனோடு எல்லாம் முடிந்து போகும்.

என்ன செய்வது பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தொடரவே போகிறது.

இதுபற்றி நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கதைப்பதாகத் தெரியவில்லை.

கொழும்பு – யாழ்ப்பாணம் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து தற்கொலை தவிர்ந்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் எத்தனையோ பேர் இறந்துள்ளனர்.

அதிலும் குறிப்பிட்ட கடவைகளில் புகையிரதத்தால் மோதுண்டு உயிரிழக்கின்ற சம்பவங்கள் அடிக்கடி நடந்தாகின்றது.

புகையிரதக் கடவைகளில் பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்குகள் ஒளிர்வது தெளிவாகத் தெரிவதில்லை.

எனினும் இதுவிடயத்தில் போக்குவரத்து அமைச்சு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சிலவேளை யுத்த காலத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுத்தும் பொருட்டு பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் வடபகுதியில் அமைக்கப்பட்டுள்ளனவோ என்று சுவச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

அந்தளவுக்கு வடபகுதியில் புகையிரதக் கடவைகளில் நடக்கின்ற விபத்து மரணங்கள் அதிகரித்துள்ளன.

இதுபற்றி பாராளுமன்றத்தில் நம் பிரதிநிதிகள் உரையாற்றுவார்களாக இருந்தால் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சும் புகையிரதத் திணைக்கள உயர்அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பர்.

ஆனால் அதுபற்றிப் பேசுவதற்கு எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தகவலும் தெரியாது ஆதாரங்களும் கிடையாது.

இந்தநிலையில் புகையிரத வண்டியில் மோதுண்டு இறக்கின்றவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஆம், நேற்றுக்கூட (01) அரியாலை புங்கன் குளத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் புகையிரத வண்டி மினிபஸ் ஒன்றை முட்டி மோதித் தள்ளியதில் அந்த மினிபஸ் உரிமையாளர் அந்த இடத்திலேயே உயிரிழந்து போனார்.

இதற்கு முன்பும் இதே கடவையில் புகையிரத வண்டி மோதி பலர் உயிரிழந்துள்ளனர்.

எனினும் இன்றுவரை அதுபற்றி எவரும் கவனிக்கவில்லையெனில் இதன் உள்நோக்கம் என்ன என்பது புரிதற்குரியது.

# கல்விக்கான பிராந்திய மையமாக இலங்கையை மாற்ற வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கல்விக்கான பிராந்திய கேந்திர நிலையமாக இலங்கையை மாற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி விக்கிரமசிங்க, கல்வித் துறையில் பயன்படுத்தப்படாத மகத்தான ஆற்றல்கள் இருப்பதால் இலங்கை புதிதாக சிந்திக்க வேண்டும் என்றார்.

கல்வித் துறையை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்கள் செலவிடும் 3 பில்லியன் ரூபாவை சேமிக்க முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை அறிமுகப்படுத்துதல் அல்லது ஆதரிப்பது தொடர்பில் ஒருமித்த கருத்துக்கு வருமாறும் ஜனாதிபதி சபையில் கோரிக்கை விடுத்தார்.

மருத்துவ பீடங்களைத் தவிர, பெரும்பான்மையானவர்கள் தனியார் பட்டம் வழங்கும் அமைப்புகளை அறிமுகப்படுத்துவதை எதிர்க்கவில்லை.

வழிகாட்டல்கள் மற்றும் அளவுகோல்கள் பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அதன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒழுங்குமுறை ஏற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்கால சந்ததியினருக்கு நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ள சிறந்த கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதால், கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான எந்தவொரு கலந்துரையாடலுக்கும் தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)

## சம்பளத்தில் 15 வீதத்தினை சேலைக்கு செலவிடும் ஆசிரியைகள்

கல்வியமைச்சின் அறிவுறுத்தல்களிற்கு ஏற்ப ஆடை அணிவதற்காக ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தின் 15 வீதத்தினை செலவிடுகின்றனர் என்பது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

ஜப்பான் பல்கலைகழகத்தின் கலாநிதிப் பட்ட ஆய்விற்காக லசினி ஜெயசூரிய என்பவர் மேற்கொண்ட ஆய்வின் போது இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தின் குறிப்பிடத்தக்க பகுதியை பாடசாலைகளிற்கு அணிவதற்கான ஆடைகளை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்துகின்றனர் என ஆய்வின் போது தெரியவந்துள்ளது.

ஆசிரியர்கள் அதிகளவில் சேலைக்கு பணத்தை செலவிடுகின்றனர் எங்கள் ஆய்வின் போது ஆசிரியர்களின் சம்பளத்தில் 15 வீதம் உடைகளிற்கு செலவிடப்படுவது தெரியவந்துள்ளது என ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் சேலை அணியவேண்டும் என்ற கட்டாயம் காரணமாக அது அவர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளை எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

நாங்கள் 15 ஆசிரியர்களிடம் உரையாடினோம் கேள்வி பதில்கள் மூலம் 100 ஆசிரியர்களின் விபரங்களை பெற்றோம், இதன்போது சேலை கற்பித்தல் நடவடிக்கைகளை பாதிக்கின்றது என்பதை கண்டறிந்தோம்,மேலும் சேலையால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் நாங்கள் ஆராய்ந்தோம் என தெரிவித்துள்ள ஜெயசூரிய சேலை காரணமாக எங்கள் ஆய்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களில் 30 வீதமானவர்கள் விபத்துக்களை எதிர்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது புகையிரதங்கள் போன்றவற்றில் பயணிக்கும்போது இவ்வாறான விபத்துக்கள் வழமையான விடயமாக காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் ஆசிரியர்களின் ஆடைகள் தொடர்பான விதிமுறைகள் பெண்களிற்கு எதிரான பாரபட்சத்தினை கொண்டுள்ளன, ஆண்களிற்கு மேற்கத்தைய பாணியில் ஆடை அணிவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக் கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 4 மணி வரை யாழ். பிரதேசத்தில் எஸ்.எஸ் கட்டடம் கல்லூரி வீதி-தம்பசிட்டி, கிராமக்கோடு, பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை சந்தை, சாளம்பை, சாரையடி, தம்பசிட்டி சந்தி,வி.எம் வீதி, வேலங்குல வீதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பெண் சபை உறுப்பினர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில்

பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இன்னும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே ஜனாதிபதிஇதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், சனத்தொகையில் பெரும்பான்மையானவர்கள் பெண்களாக இருந்தாலும் தற்போது 12 பெண் உறுப்பினர்கள் மாத்திரமே பாராளுமன்றத்தில் இருப்பது துரதிஷ்டவசமானது என தெரிவித்துள்ளார்.

பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு புதிய சட்டங்களை உருவாக்குமாறு பெண் பாராளுமன்ற உறுப்பினர் குழுவிடம் கோரிக்கை விடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க பட்டியல் முறையொன்றை அறிமுகப்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## அதிக சுற்றுலாப் பயணிகளை டிசம்பர் எதிர்பார்க்கின்றோம் அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ

டிசம்பர் மாதம் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலங்கை எதிர்பார்த்துள்ளதாக சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் சுற்றுலா வலயங்களில் இரவு நேர மின் துண்டிப்பை தவிர்க்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்காக, அதிக எண்ணிக்கையிலான ஹோட்டல்களில், முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் 49 வலயங்கள் சுற்றுலா வலயங்களாக பெயரிட்டு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். அவற்றில் இதுவரை 14 வலயங்கள் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பெயரிடப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பாணந்துறையில் துப்பாக்கிச்சூடு சட்டத்தரணி உள்ளிட்ட மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பாணந்துறை, சில்வன் ஒழுங்கையில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சட்டத்தரணி ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை அடுத்து, சந்தேகநபரான சட்டத்தரணியால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்துடனான கைத்துப்பாக்கி மற்றும் சட்டத்தரணியின் வாகனம் என்பன பொலிஸாரால்கைப்பற்றப்பட்டுள்ளன.

துப்பாக்கிப் பிரயோகத்தின் போது எவருக்கும் காயம்ஏற்படவில்லை.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய ரீதியில் 38.4 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோயால் பாதிப்பு

## இலங்கையில் 3600 பேர்

**(கொழும்பு)**

**உலகில் 38.4 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 1.5 மில்லியன் மக்கள் புதிய நோயாளர்கள் என வவுனியா பொது மருத்துவமனையின் பாலியல் நோய் சிகிச்சை பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி. பா.அருள்மொழி தெரிவித்தார்.**

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நேற்று பொது மருத்துவமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், இவ்வாறு நோய் தாக்கத்திற்குள்ளானவர்கள் 6.5 மில்லியன் மக்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் எயிட்ஸ் காரணமாக ஏற்பட்ட நோய்களினால் இறந்துள்ளனர். இலங்கையை பொறுத்தவரை இதுவரை கணக்கெடுப்பின் பிரகாரம் 3600 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 85 வீதமானவர்களே சிகிச்சை பெறுகின்றனர். 2021 ஆம் ஆண்டு 411 பேர் எயிட்ஸ் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டு இலங்கையின் தரவு அடிப்படையில் 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளம் வயதினர் எச். ஐ. வி தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். இது 14 வீதமாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவர்களில் இளம் ஆண்களே கூடுதலாக உள்ளனர் எனத் தெரிவித்தார். (4-6-250-299)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பச்சிளங் குழந்தைகளின் அதி தீவிர சிகிச்சை பிரிவிற்கு நைட்றிக் ஒக்சைட் சிலிண்டர் ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. அவுஸ்திரேலியா கில்ஸ் கெலிவிலே றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் நல்லூர் றோட்டறி கழகத்தினால் இச் சிலிண்டர் வழங்கி வைக்கப்பட்டது.

# கடும் பனியால் நுவரெலியா போன்று மாறிய வவுனியா



(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று காலை அதிகளவான பனிமூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளை சந்தித்திருந்தனர். வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் காலை 8.00 மணிவரை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக வேலைக்கு செல்வோர், வாகனச் சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். (4-6-250)

# தீ காயங்கள் ஏற்பட்டால் வீட்டு மருத்துவங்களை செய்யாதீர்கள்

## மருத்துவ நிபுணர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

தீ, மின்சாரம், மின்னல் தாக்கம் ஆகியவற்றால் ஏற்படும் எரிகாயங்களுக்கு வீட்டு மருத்துவம் என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகளை தவிர்க்குமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவ கலாநிதி. இளாஞ்செழிய பல்லவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எரிகாயங்களுக்கு உள்ளானவர்களுக்கு அயலவர்கள் கூறும் மருத்துவம் அல்லது அவர்களின் வீட்டில் உள்ளவர்கள் கூறும் பேஸ்ட் பூசுதல், கற்றாழை பூசுதல், மழை நீர் ஊற்றுதல்,ஐஸ் கட்டி வைத்தல் போன்ற செயற்பாடுகளை செய்வது அறிவார்ந்த சமுதாயத்துக்கு உகந்ததல்ல. ஏனெனில் சிறு வயதில் கற்றிருப்போம் உலோகங்கள் வெப்பத்தை கடத்தும் என. ஆனால் வீட்டில் சமையலறையில் பயன்படுத்தப்படும் அகப்பை வெப்பத்தை கடத்தாது. வீட்டு மருத்துவம் என்ற போர்வையில் பயன்படுத்தப்படும் மேலே குறிப்பிட்ட முறைகள் அனைத்தும் வெப்பத்தை வெளியேற விடாமல் காயத்துக்கு உள்ளே செல்ல வழி வகுக்கும்.

இதன் காரணமாக எரிகாயங்களில் இருந்து வெப்பம் வெளியேறாமல் உள்ளே சென்று காயங்களை மேலும் விரிவாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரிக்கிறது. எரிகாயங்கள் ஏற்பட்டால் வீட்டில் மேற்கொள்ளக்கூடிய முதலுதவிகளான மின்விசிறியை பயன்படுத்தி காற்றில் பிடித்தல் அல்லது ஓடுகிற நீரில் காயப்பகுதியை பிடிப்பதன் மூலம் வெப்ப இழப்பு குறைக்கப்படுகிறது.

குறித்த முதலுதவிகளை 20 நிமிடம் வரை மேற்கொண்டு உரிய மருத்துவரை அணுகி அதற்கான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 170 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 200 |
| தக்காளி | 260 | 240 | 300 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 200 | 200 |
| கோவா | 250 | 230 | 300 | 300 |
| கரட் | 300 | 450 | 500 | 450 |
| பூசணி | 100 | 120 | 150 | 150 |
| புடோல் | 250 | 260 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 650 | 650 | 650 | 700 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 150 | 150 |
| பயற்றங்காய் | 200 | 350 | 200 | 400 |
| லீக்ஸ் | 400 | 450 | 480 | 500 |
| பீற்றூட் | 400 | 340 | 500 | 450 |
| கறிமிளகாய் | 700 | 800 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 800 | 600 |
| போஞ்சி | 300 | 350 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 200 | 200 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 65 | 70-90 |
| இராசவள்ளி | 300 | 280 | 300 | 300 |
| வெங்காயப்பூ | -- | 400 | 400 | - |
| முள்ளங்கி | 200 | 250 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 140 | 80 | 150 |

# சர்வதேச நீதி கோரி வவு. உறவுகள் போராட்டம்



(குருமன்காடு)

சர்வதேசத்தின் நீதி கோரி வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

குடும்பங்களாக சரணடையும் போது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த 29 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் எங்கே?,யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப் பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமல் ஆக்கப்பட்டோர் என அவர்களின் குடும்பத்தையும் ஏமாற்றுகின்றது போன்ற பல்வேறு வசனங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பொதுஅமைப்பினர், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளத்தில் நீராடிய...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வரணி, குடமியனைச் சேர்ந்த மகாலிங்கம் மணிவண்ணன் (வயது, 37) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை அப்பகுதியில் உள்ள சப்ரா குளத்தில் நீராடியதாக தெரிவிக்கப்படுகிறது.

குளத்தில் நீராடியவர் நீரில் மூழ்கிய நிலையில் அப்பகுதி இளைஞர்கள் சேர்ந்து குளத்தில் தேடுதல் நடத்திய போதிலும் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிளவில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7,30,33,60,104)

## பாடசாலைகளு...

மூன்று கட்டங்களின் கீழ் இடம்பெறவுள்ளது.

அதன்படி, அன்றைய தினம் முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை முதற் கட்டமாக பாடசாலை கல்வி நடவடிக்கைகள் நடைபெறும்.

அதன்பின்னர், டிசம்பர் 23ஆம் திகதி முதல், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை நத்தார் பண்டிகைக்காகப் ப்ாடசாலை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்காக, 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு அம்மாதம் 20ஆம் திகதி நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## அரியாலையில்...

நேற்று வியாழக்கிழமை மதியம் ஒரு மணியளவில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து காங்கேசன் துறைக்கு வந்துகொண்டிருந்த ரயில் ஏ.பி. வீதியில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையில், மினிவானுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

ரயில் பேருந்தை மோதித் தள்ளியதில் பேருந்து அருகில் உள்ள காணியின் மதிலை உடைத்து தொங்கிநின்றது. மேலும் ரயிலின் இயந்திரபகுதி சேதமடைந்ததால் மற்றொரு இன்ஜின் கொண்டு வரப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டது.

குறித்த கடவையில் பல விபத்து சம்பவங்கள் இடம்பெற்று உயிரிழப்புக்கள் ஏற்பட்ட போதிலும் அதனை பாதுகாப்பான கடவையாக மாற்ற எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டி வந்த நிலையில் நேற்றைய விபத்து சம்பவத்தினை அடுத்து விசாரணைகளை முன்னெடுக்க வந்திருந்த பொலிஸாருடன் அப்பகுதி மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது. அதனை அடுத்து சம்பவ இடத்திற்கு மேலதிக பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் குவிக்கப்பட்டு, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-7,33,60,104)

## பருத்தித்துறையி...

பருத்தித்துறை மூன்றாம் குறுக்கு தெருப் பகுதியை சேர்ந்த இளைஞர்கள் சிலர்

பருத்தித்துறை துறைமுகத்தில் மோட்டார் சைக்கிளில் சாகசம் புரிந்து அதனை ரிக்ரொக் வீடியோ செய்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வேளை மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து இளைஞருடன் சேர்ந்து கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மேற்படி இளைஞர் அப்பகுதியில் நின்றவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளதுடன் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து கடலுக்குள் பாய்ந்த மோட்டார் சைக்கிளை வெளியில் எடுத்துள்ளனர். (ம-7,33,60)

## கணவன், மனை...

தத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். சம்பவத்தையடுத்து அவர்களது வீட்டில் தோட்ட வேலைகளுக்கு அமர்த்தப்படும் சாஸ்திரி கும்மாங்குளத்தைச் சேர்ந்த சகோதரர்களான சிங்காரு சத்தியசீலன், சிங்காரு சதீஸ்வரன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். வவுனியா நீதவான் நீதிமன்றில் சுருக்க முறையற்ற விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் எதிரிகள் இருவருக்கும் எதிராக கொலை, கொள்ளை குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விளக்கம் இடம்பெற்று வந்தது. கொல்லப்பட்டவர்களின் மகள், பொலிஸார், நிபுணத்துவ சாட்சிகள் மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சிகள் நிறைவடைந்த இன்று தீர்ப்புக்கு நியமிக்கப்பட்டது."சாட்சிகளின் அடிப்படையில் முதலாவது எதிரி பரமேஸ்வரி என்பவரை உயிர் போகும் படி கூரிய ஆயுதத்தினால் தாக்கியமை மற்றும் அவரது நகைகளை கொள்ளையிட்டமை மற்றும் முத்தையாவை உயிர் போகும் வரை கூரிய ஆயுதத்தினால் தாக்கியமை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் அவரை குற்றவாளியாக உறுதி செய்து முதலாவது குற்றத்துக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் இரண்டாவது குற்றத்துக்கு இரட்டைத் தூக்குத்தண்டனையும் விதிக்கப்படுகிறது. இரண்டாவது எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படாத நிலையில் அவர் விடுவித்து விடுதலை செய்யப்படுகிறார்" என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

தூக்குத் தண்டனை குற்றவாளியை இலங்கை ஜனாதிபதி தீர்மானிக்கும் நாளில், உயிர் பிரியும் வரை தூக்கிலிட்டு தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் மேல் நீதிபதி தீர்ப்பளித்தார். (ம-7,33,104)

## யாழ்ப்பாணத்தில்...

கட்டட ஆய்வு நிறுவகம் நேற்று காலை விடுத்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. காற்று மாசு தரக் குறியீட்டின் பிரகாரம், 24 மணிநேரத்தில் இருக்கக்கூடிய தூசு துகள்களின் அளவு ஒரு கன மீற்றரில் இருக்கக் கூடிய 50 மைக்ரோகிராம் அளவு ஆகும்.

இலங்கையின் மூன்று மாவட்டங்கள் காற்று தரக் குறியீட்டில் ஆரோக்கியமற்ற எச்சரிக்கை நிலையான சிவப்பு நிற தரக் குறியீட்டை கொண்டுள்ளன. புத்தளம், யாழ்ப்பாணம் மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களே ஆரோக்கியமற்ற எச்சரிக்கை நிலையை வெளிப்படுத்தியுள்ளன.

இதன் பிரகாரம், புத்தளத்தில் காற்று மாசு தரக்குறியீடு 174 ஆக காணப்படுவதுடன், யாழ்ப்பாணத்தில் 171 ஆகவும் பதுளையில் 160 ஆகவும்காணப்படுகின்றது.

இவ்வாறு ஆரோக்கியமற்ற சிவப்பு எச்சரிக்கை நிலையின்போது, மனிதர்களுக்கு உடல் நல பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதுடன், நோய்வாய்ப்படுவோருக்கு கடுமையான உடல்நல பாதிப்புகள் ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காற்றில் தூசின் அளவு அதிகரித்து [illegible] அதுதொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம்என சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (ம-7)

## தகுதியற்றவர்க...

கொடுப்பனவைப் பெறுவதில் இருந்து நீக்கப்பட்டால், தகுதியுடையவர்களுக்கு அதனை வழங்கலாம் என கூறினார். (ம-7)

## யாழ்.- சென்னை...

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் கோவிட் தொற்றுக் காரணமாக மூடப்பட்டு இன்று வரை மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

இவ்வாறு மூடிய நிலையில் உள்ள யாழ்ப்பாண விமான நிலையம் மீண்டும் டிசம்பர் 12 ஆம் திகதி திறக்கப்பட்டு சென்னைக்கான விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆரம்ப பணிகளிற்காக நேற்று முன்தினம் சுற்றுலா அதிகார சபையில் இருந்து இரு அதிகாரிகள் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு இடம்பெறவுள்ளதாக கூறப்படும் விமான சேவைக்கான விமான சிட்டைகள் இன்று முதல் முற்பதிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/12/01
சீட்டிழுப்பு இலக்கம் 4956
V 7 0 8 1 4 1
தேசிய லொத்தர் சபை

ஹந்தான HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.12.01
சீட்டிழுப்பு இலக்கம் 265
கடகம் 22 33 44 48 கடகம்

மெகா பவர்
திகதி 01/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1304
D 18 01 54 55 78

கொவிசெத
திகதி 2022.12.01
சீட்டிழுப்பு இலக்கம் 3198
Y 18 33 39 71
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.01
சீட்டிழுப்பு இலக்கம் - 986
U 09 41 51 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1411
கடகம் 1 9 8 2 1 1
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1757
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.12.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,866,620/-
13 31 44 49 J

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.12.01
சீட்டிழுப்பு இல: 4092
வர்ணம்: சிவப்பு
ரூ. 4,585,120/-
21 23 24 63 I

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 37 06 09 26 33
சீட்டிழுப்பு வாரம் 1107
செம்மஞ்சள்
2022.12.01 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 282,081,611.80
011-2 333 546-47
Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 549
திகதி 2022-12-01
வர்ணம் நீலம்
X 28 38 42 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14,671,532/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1931
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.12.01
தினம் வியாழக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,936,300/-
U 08 16 18 37
7125 834

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,634,627.40
திகதி 2022-12-01
வெற்றி வாரம் 3643
வர்ணம் கபிலம்
04 18 32 41
கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,399,520/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவிவகார அமைச்சின் செயலாளருடன் சீனத் தூதுவர் கலந்துரையாடல்



(கொழும்பு)

சீனத் தூதுவர் Qi Zhenhong நேற்று வியாழக்கிழமை காலை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் பலதரப்பட்ட விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இரு நாடுகளும் இராஜதந்திர வழிகள் மூலம் நெருக்கமாகப் பணியாற்றவும் இரு தரப்பு மற்றும் பல தரப்பு கடன் பிரச்சினைகளில் தொழில் முறை பேச்சுவார்த்தைகளை ஆதரிக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, சீனத் தூதுவர் Qi Zhenhong ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் தலைவர் அசோக் பத்திரகேவையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சிவில் விமான போக்குவரத்து மற்றும் சுற்றுலா ஒத்துழைப்பு தொடர்பான விடயங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம-7)


நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
கலை வர்த்தகம்
A/L 2024
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.12.2022 சனி காலை 09 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (13631)
அலுவலக தொடர்பு - 076 166 1986

சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்
கனடாவுக்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
Hybrid International Hub (pvt) LTD
076 250 0098 (C-5388)

A/L - 2024
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
நாளை ஆரம்பம்
காலை - 8.00 மணி (13634)
DMI JAFFNA

NEC - யாழ் நகர்
பெருமாள் கோவில் அருகில்
கலை வர்த்தகம்
A/L 2024
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.12.2022 சனி காலை 08 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (13631)
அலுவலக தொடர்பு - 076 535 0999

SINCE-1963
சதாபொன்ஸ் கல்வி நிலையம்
மாலிசந்தி, அல்வாய்.
O/L மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் : 05.11.2022 திங்கட்கிழமை காலை 7.30 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (C-5386)
077 309 5176, 021 226 3206, 077 925 0105

D.C.M N
யாழ்.நகர்
( யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை )
புதிய பிரிவுகள்
A/L 2024
கலை, வர்த்தக வகுப்புக்கள்
03.12.2022 சனிக்கிழமை காலை 8.00 மணி (C-5391)

A/L - வரலாறு 2024
ஆரம்பம் : 03.12.2022(சனிக்கிழமை)
மாவட்ட, தேசிய மட்டங்களில் சாதனைகளுக்கு வித்திட்ட உங்கள் ஆசான்
M.பத்மன் B.A (Hons) History, M.A (Hons) History, P.G.D.E, M.E.D R
A/L 2023 அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.
கற்பிக்கும் இடங்கள்
D.M.I யாழ்ப்பாணம் உயர்கலைக்கல்லூரி
BITSMANS மானிப்பாய் (C-5389) குளப்பிட்டி

வீடு வாடகைக்கு உண்டு
கொக்குவில் கிழக்கு நந்தாவில் ஒழுங்கையில் நான்கு அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (13640)
076 592 4210

பெயின்ரர் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மரத்தளபாடங்கள் மற்றும் கதவு, யன்னல் என்பவற்றுக்கு water base Painting வேலை செய்யக் கூடிய அனுபவமுள்ள திறமையான பெயின்ரர் (Painter) தேவை. (C-5387)
077 777 0969


# மரண அறிவித்தல்

## திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை

பிறப்பு - 09.12.1935 இறப்பு - 28.11.2022



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் செட்டித்தெரு நல்லூரரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை அவர்கள் 28.11.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வயித்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் சிந்தாமணி குணசிங்கத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, திருமதி தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சுப்பிரமணியம், திருமதி சின்னத்தம்பி காங்கேசு, குமாரசாமி, ஐயாத்துரை ஆகியோரின் மைத்துனியும் சத்தியவரதன் (கட்டப்பிராய்), நிர்மலா (நல்லூர்), கிருபாவரதன் (நெடுந்தீவு), கோகுலவரதன் (லண்டன்), சந்திரகலா (நல்லூர்), விஜயலதா (லண்டன்) பத்மவரதன் (கனடா), தவமேகலா (லண்டன்), பானுகலா (பிரான்ஸ்), அருள்வரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மஞ்சுளா (கட்டப்பிராய்), சிறிகரன் (நல்லூர்) பாக்கியலட்சுமி (நெடுந்தீவு), சகுந்தலாதேவி (லண்டன்), புவனேந்திரா (நல்லூர்), தருமரத்தினம் (லண்டன்), பொன்மதி (கனடா), செல்வராசா (லண்டன்), சபேசன் (பிரான்ஸ்), ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் குமரன், குகப்பிரியன், ஜனகன், துவாரகன், மகிபன், நிருஜன், கினோஜா, மதுஷன், நிரோஷன், கிந்துஜன், அபியதர்சன், விட்டலன், லக்சினி, யனுசா, தனுசா, அனுராஜ், அபிராஜ், பானுசன், டினோசா, கபிசன், அபிசன், ஆருத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பமாகி மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இ - 077 982 5051 (13639)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.